## நியாயமான போராட்டங்கள் மாசடைவதில்லை!



பெரு நிறுவனங்களுக்குச் சாதகமான வகையில், மூன்று வேளாண் சட்டங்களைக் கடந்த ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்தது பாரதிய ஜனதா கட்சி. அவற்றை எதிர்த்து விவசாயிகளின் வீரம் செறிந்த போராட்டங்களால், அந்தச் சட்டங்களை நிறுத்தி வைக்கும் நிர்பந்தம், பா.ஜ.க.வுக்கு உருவானது.

விவசாயிகளின் போராட்டத்தின்போதே, பல அவதூறுகளையும், அடக்குமுறைகளையும் ஏவி போராட்டங்களை முறியடிக்க நினைத்தது பா.ஜ.க. அரசு. அந்தப் போராட்டங்களை தீவிரவாதிகளின் சதி என சர்ச்சையாகப் பேசி கண்டனத்துக்கு ஆளானவர் பா.ஜ.க. ஆதரவாளரான நடிகை கங்கனா ரணாவத்.

அவரின் சர்ச்சைப் பேச்சுகளுக்காக, சண்டிகர் விமான நிலையத்தில் பாதுகாப்புத்துறை பெண் அதிகாரி ஒருவர் அவரைத் தாக்கியதும் நிகழ்ந்தது. இப்போது பா.ஜ.க.வின் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் கங்கனா, மீண்டும் விவசாயிகள் போராட்டத்தைச் சிறுமைப்படுத்தும் வகையில் பேசி, சர்ச்சைகளை ஏற்படுத்தி இருக்கிறார். போராட்டத்தில் பாலியல் துன்புறுத்தல்களும், படுகொலைகளும் நடந்தன என்கிற அவரது பேச்சுக்கு, நாடு முழுவதும் எதிர்க்கட்சிகள் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றன. ஹரியானா மாநில சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், பா.ஜ.க. தலைவர்களும் அவரின் சர்ச்சைப் பேச்சைக் கண்டித்து நீலிக்கண்ணீர் வடித்துள்ளனர்.

பிரதமர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என விவசாயச் சங்கங்கள் போராடத் தொடங்கி இருக்கின்றன. சர்ச்சைகளை உருவாக்குவதும், மன்னிப்பு கேட்பதும் பா.ஜ.க.வுக்கு புதிதல்ல; ஆனால், மக்களின் நியாயமான போராட்டங்கள் அவதூறுகளால் மாசடைவதில்லை.

## :ப்ளாஷ்பேக்





ஆ.மாடசாமி

### தலைவர் அணிவித்த மோதிரம்!

1988-ஆம் ஆண்டு நெல்லை மாவட்டக் கழகம் சார்பில், தலைவர் கலைஞர் பங்கேற்ற தேர்தல் நிதியளிப்பு விழா மற்றும் பொதுக்கூட்டம் நெல்லை டவுன் சாப்டர் பள்ளித் திடலில் நடைபெற்றது. மானூர் ஒன்றியக் கழகச் செயலாளராக இருந்த நான், எங்கள் ஒன்றியம் சார்பில், தேர்தல் நிதியளித்தேன். தலைவர் எனக்கு மோதிரம் அணிவித்து, பொன்னாடை போர்த்தி, பாராட்டுத் தெரிவித்தார். அந்த நிகழ்வு எனக்கு மிகவும் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் அளித்தது. உடன் அன்றைய தேர்தல் பணிச் செயலாளர் வை.கோ, நெல்லை மாவட்டச் செயலாளர் இலக்குமணன், தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் என். பெரியசாமி, பொதுக்குழு உறுப்பினர் அம்பை சோமு ஆகியோர் உள்ளனர்.

**– ஆ.மாடசாமி,**

**முன்னாள் மானூர் ஒன்றியச் செயலாளர்.**

**செழியநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணாவின் வருத்தம்!

1955-ஆம் ஆண்டு, 'ஹோம்லாண்டு' பத்திரிகை முயற்சிகள் தடைபடுவது குறித்து எழுதினார் பேரறிஞர் அண்ணா. "திராவிட நாடு கிளர்ச்சி பற்றி, பிற இடங்களில் அறிந்து கொள்ளத்தக்க வகையில், ஆங்கில ஏடு நடத்துவது என்ற எண்ணம் எனக்கு நீண்டகாலமாக உண்டு. இருமுறை அதற்கான முயற்சி எடுத்து முறிந்து போனதுமுண்டு இப்போதும் அந்த எண்ணம் இருந்தபடிதான் இருக்கிறது - தக்க வாய்ப்பு ஏற்படவில்லை, தம்பி! நமக்கிருக்கும் குறைபாடுகள் இவை போன்றவைதான்" என்றார்.

# எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்** **26**

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

2001-இல் அமைக்கப்பட்ட ஹூக்கும் சிங் குழு உத்தரபிரதேசத்தில் பிற்படுத்தப்பட்டோர் (OBC) மக்கள்தொகை 50% என கணக்கிட்டது. அவர்களில் யாதவ்கள் 20%, குர்மிஸ் 7.5% உள்ளனர். அங்கு தற்போது பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இடஒதுக்கீடு உள்ளது. அன்றைய உத்தரபிரதேசம், அதாவது ஐக்கிய மாகாணத்தில் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு கோரிய உரிமைக் குரல்களின் நிலை என்னவாக இருந்தது?

ஜாதவ்களிடம் வேலை செய்ததைப் போன்றே 'ஆரிய சமாஜம்' யாதவ்களை ஆரியமயமாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. 1895-இல் ராவ் யுதிஷ்டர் சிங் தன்னுடைய ஆளுகைக்கு உட்பட்ட ரேவாரி (இன்றைய ஹரியானா மாநிலம்) பகுதிக்கு ஆரிய சமாஜத்தின் நிறுவனர் தயானந்த சரஸ்வதியை அழைத்தார். பூணூல் அணியவேண்டும் என்றும், பசுப் பாதுகாப்பு இயக்கத்தில் இணைந்து செயல்படவேண்டும் என்றும் ஆரிய சமாஜத்தினர், யாதவ்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தனர். அதன்படி ஆரிய சமாஜத்துடன் இணைந்து, ராவ் யுதிஷ்டர் சிங், 'கோரக்ஷா சபை' (பசுப் பாதுகாப்பு சபை) நிறுவினார். இச்சங் கத்தின் கிளைகள், வடஇந்தியா முழுவதும் உருவாகின. மறுபுறம் தங்களை 'சத்திரி யர்கள்' என அழைக்க வேண்டுமென பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் கோரினர்.

**மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் கீழ் மாகாண சட்டப்பேரவைகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு எவ்வித இடங்களும் ஒதுக்கப்படவில்லை.**



ராவ் யுதிஷ்டர் சிங்

1910-இல் ராவ் பகதூர் பல்பீர் சிங் நிறுவிய அஹிர் யாதவ் சத்திரிய மகாசபை (Ahir Yadav Kshatriya Mahasabha) அஹிர்கள் யது வம்சத்தின் வழித்தோன்றல்கள் என்று கூறியது. அஹிர்களின் உண்மையான பெயர் யாதவ்கள் என்பதும், அவர்கள் சத்திரியர்கள் என்பதும், கிருஷ்ணன் யது வம்சத்தைச் சேர்ந்தவன் என்பதும் அவர்களின் வாதம்.

## ஒற்றுமையின்மையின் பலவீனம்!

இந்தியா முழுமைக்கும் யாதவ் என்ற பெயரைச் சூட்டிக்கொள்ள வேண்டும் என அனைத்திந்திய யாதவ் மகாசபா (All India Yadav Mahasabha) கோரியது. அஹிர்கள், யாதவ்கள் போலவே, அனைத்திந்திய குர்மிஸ் சத்திரிய சங்கத்தை நிறுவிய குர்மிஸ், கோரிஸ் உள்ளிட்ட இடைநிலைச் சாதிகளும் தங்களை ஆரியமயமாக்கிக் கொள்வதின் மூலம் சமூகப் பொருளாதார ஒடுக்குமுறையிலிருந்து விடுபட முடியும் என்று நம்பினர். இவர்கள் அனைவருமே தங்களை 'ஷத்திரியர்கள்' என்றனர். பூணூல் அணிந்து கொள்ளவேண்டுமென தத்தம் சாதி மக்களிடம் பரப்புரை செய்தனர்.

சத்திரியர் என்ற அடையாளத்தைக் கோருதல், பூணூல் அணிதல், பசுப் பாதுகாப்பு இயக்கங்களை ஆரம்பித்தல் போன்ற ஆரிய மயமாக்கல் நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும், பிரிட்டிஷ் அரசு நிறுவிய கல்விக்கூடங்கள், அவற்றில் பயின்றால் கிடைக்கக்கூடிய வேலைவாய்ப்புகள், சமூகப் பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றின் பால் ஈர்ப்புக் கொண்ட சாதிச் சங்கங்கள் கல்வி, வேலைவாய்ப்புகளை பிரிட்டிஷ் அரசிடம் கோரினர்.

பிரிட்டிஷ் இராணுவத்தில் அதிகாரிகளாக யாதவர்களைச் சேர்க்கவேண்டும் என்று அனைத்திந்திய யாதவ் மகாசபா கோரியது. குர்மிகளை சத்திரியர்கள் என்று அழைக்க வேண்டும் என்று கோரிய அனைத்திந்திய குர்மி சத்திரிய மகாசபை நிர்வாகத்தில் இடஒதுக்கீடு கோரியும் பிரிட்டிஷ் அரசிடம் மனு அளித்தது.

'யாதவ்', 'குர்மிஸ்', 'கோரிஸ்' உள்ளிட்ட இடைநிலைச் சாதிகள் அவ்வப்போது கல்வி, வேலைவாய்ப்பு குறித்து பிரிட்டிஷ் அரசிடம் கோரிக்கை எழுப்பினாலும், அவர்கள் ஆரியமயமாக்கலில் காட்டிய ஆர்வத்தை கல்வி, வேலைவாய்ப்பு, அரசு நிர்வாகப் பதவிகளை ஏகபோகமாக அனுபவித்த 'பிராமணர்கள்', 'காயஸ்தா' உள்ளிட்ட உயர் சாதியினரின் ஆதிக்கத்தை எதிர்ப்பதில் காட்டாததாலும், அவர்களிடம் ஒற்றுமை இல்லாததாலும், மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் கீழ் மாகாண சட்டப்பேரவைகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு எவ்வித இடங்களும் ஒதுக்கப்படவில்லை.

**...குரல் ஒலிக்கும்**

# மாநாடு

**ர.பிரகாசு** **26**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டபோது, ஆட்சிமொழியாக எதனைப் பயன்படுத்துவது என்பதில் நீண்ட விவாதம் நடைபெற்றது. இந்தி தெரியாத மாநிலங்கள் கற்றுக்கொள்ள 15 ஆண்டுகள் அவகாசம் அளிப்பது என்றும், 1965-ஆம் ஆண்டு முதல் இந்தியை ஆட்சிமொழியாக அறிவிக்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்களில் இந்திக்கு எதிராக நிலவிய கடும் எதிர்ப்பால், 1963-இல் கொண்டுவரப்பட்ட ஆட்சிமொழிச் சட்டத்தில், 1965-ஆம் ஆண்டுக்குப் பிறகு, 'இந்தியுடன் ஆங்கிலமும் ஆட்சிமொழியாகத் தொடரலாம்' என்று திருத்தம் செய்யப்பட்டது.

"தொடரலாம்" என்று இருப்பதை "தொடரும்" என்று மாற்ற வேண்டுமென போர் முழக்கம் எழுப்பினார் பேரறிஞர் அண்ணா. மீண்டும் எதிர்காலத்தில் இந்தி தலைதூக்கும் ஆபத்து இதற்குள் இருக்கிறது என்ற அண்ணாவின் எச்சரிக்கையை இறுகப் பற்றிக் கொண்டது தமிழ்நாடு. தி.மு.கழகத்தின் எதிர்ப்பையும் மீறி, **'மும்மொழிக் கொள்கை'** அறிமுகப்படுத்தப் படும் என அறிவித்தார், அன்றைய முதல்வர் பக்தவத்சலம். இதனை எதிர்த்து போர்க்களம் கண்டது தி.மு.கழகம். தி.மு.கழகத்தோடு தோள் கொடுத்து உடன்நிற்க, 1965 -ஆம் ஆண்டு ஜனவரியில் தமிழக மாணவர்கள் இந்தி எதிர்ப்பு சங்கம் உருவானது. மாணவர் போராட்டங்களை ஒரு குடையின் கீழ் இணைத்து, இந்தி எதிர்ப்புக் களத்துக்கு வலுவான அடித்தளம் அமைத்தது, இந்த மாணவர் அமைப்பு.

**அண்ணா பேசிவிட்டால், தமிழ்நாடே பேசியதாக அர்த்தம். தமிழ்த்தாயே பேசிவிட்டதாகப் பொருள்!"**





## கழக கர்ஜனையில் காணாமல்போன இந்தி!

1965- ஆம் ஆண்டு ஜனவரியில் திருச்சியிலும், ஜூனில் தஞ்சையிலும் சிறப்பு மாநாட்டைக் கூட்டியது, இந்த மாணவர் அமைப்பு. அதில், **தஞ்சை மாநாட்டின் எழுச்சியும், எரிமலைக் கொழுந்தாய் பற்றி எரிந்த தமிழ் உணர்வும்** தமிழ்நாடு இதற்கு முன்பு கண்டிராதது. ஜனவரி 18, 19 ஆகிய 2 நாட்கள் நடைபெற்ற இந்தச் சிறப்பு மாநாட்டில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து மட்டுமின்றி வெளி மாநிலங்களில் இருந்தும் மாணவர்கள் கூடியிருந்தனர். அலைகடலின் ஓசைகூட எட்டிப் பார்த்திடாத அளவுக்கு, ஆர்வத்தோடும் உன்னிப்போடும் அண்ணாவின் உரையைக் கேட்டது மொத்தக் கூட்டமும்.

அண்ணாவின் பேரெழுச்சிமிக்க உரையில், மொத்தக் கூட்டமும் உறைந்துப் போயிருந்த வேளையில்தான், முத்தமிழறிஞர் கலைஞர் மாநாட்டுத் திடலுக்குள் நுழைந்தார். தென்காசி, திருச்சியில் கழக நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு சோர்வோடு வந்தவருக்கு, அண்ணாவின் உரையைக் கண்டு உள்ளூர ஓர் மகிழ்ச்சி. வழக்கமாக, அண்ணாவின் உரைக்குப் பின்னர் யாரும் பேசுவதில்லை, ஆனால், கோவில்பட்டி பொதுக்கூட்டத்தில் மட்டும் கலைஞர் சில வார்த்தைகள் பேசினார். எனினும், அதற்குப் பின்னாலும் அண்ணாவின் பேச்சோடு முடிப்பதே வழக்கம். அதனால், இம்மாநாட்டில் பேச வேண்டிய அவசியம் இருக்காது என்று கருதிக்கொண்டு வந்தார். ஆனால், "நான் இத்துடன் முடிக்கவில்லை... தம்பி தொடர்கிறான்" என கலைஞர் கரங்களில் ஒலிபெருக்கியை ஒப்படைத்தார் அண்ணா.


கலைஞர் பேசப் போகிறார் என ஆர்ப்பரித்தது கூட்டம். "அறிஞர் அண்ணா அவர்கள் பேசிவிட்ட பிறகு, நான் பேசுவது எனக்கு சங்கடமாகவே இருக்கிறது. அண்ணா பேசிவிட்டால், தமிழ்நாடே பேசியதாக அர்த்தம். தமிழ்த்தாயே பேசிவிட்டதாகப் பொருள்" என்று கூறிவிட்டு, இந்தித் திணிப்புக்கு எதிராக முழங்கினார் கலைஞர். திமுகவின் இந்தித் திணிப்பு எதிர்ப்பு முழக்கம் மாணவர்களின் எதிரொலியாக மாறி, தமிழ்நாட்டின் கர்ஜனையானது. அந்த கர்ஜனையில் காணாமல்போனது இந்தி!

**...கூட்டம் திரளும்**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**583**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.